# சுற்றுமடல்

கடித எண்: GR/2/2012

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

**நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.**

திருத்தந்தை 16-ம் பெனடிக்ட் அவர்களால் நமது மாவட்டத்தை சார்ந்த தேவசகாயம் பிள்ளை முக்திபேறுபெற்ற மறைசாட்சி என ஒப்புதல் வழங்கப்பட்டு வரும் 02.12.2012 ஞாயிறு அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நாகர்கோவில் கார்மல் மேனிலைப்பள்ளி வளாகத்தில் வைத்து அதனை அறிக்கையிட மாபெரும் விழா நடைபெற உள்ளது என்பது அனைவரும் அறிந்ததே.

தேவசகாயம் பிள்ளை நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் நட்டாலம் ஊரில் 1712 -ல் நாயர் குலத்தில் பிறந்தவர். நீலகண்டன் என்னும் இயற்பெயருடைய இவர் போர் வீரர், கோயில் பணியாளர், அரச கருவூல அலுவலர் என திருவிதாங்கூர் அரச பேரவையில் பல பொறுப்பகளுடன் சிறப்பு பெற்றிருந்தார். 1741 ல் டச்சு படையை குளச்சல் போரில் வென்ற மன்னர் மார்த்தாண்டவர்மனால் டச்சு தளபதி பெனடிக்துஸ் டிலனாய் சிறைபிடிக்கப்பட்டார். நீலகண்டபிள்ளைக்கு நண்பனாய் மாறிய டிலனாய் அவருக்கு யோபுவின் வாழ்க்கையையும், இயேசுவையும் பற்றி எடுத்துரைத்தார். இப்போதனைகளால் ஈர்க்கப்பட்ட நீலகண்டபிள்ளை கிறிஸ்தவ மறையில் இணைய விரும்பி 1745 மே 14 ல் வடக்கன்குளம் கோவிலில் அருள்தந்தை புத்தாரியிடம் திருமுழுக்குப் பெற்று தேவசகாயம் பிள்ளை (லாசர்) என பெயர் பெற்றார். அவரது மனைவியும் கிறிஸ்தவ மதத்தில் இணைந்து ஞானப்பூ(தெரசம்மாள்) எனப் பெயர் பெற்றார்.

இயேசுவை ஏற்றுக் கொண்ட தேவசகாயம் பிள்ளையின் வாழ்வில் மாற்றம் தெரிந்தது. சாதிய வேலிகளைத்தாண்டி ஒதுக்கப்பட்ட மக்களோடு உறவு பாராட்டினார். அங்கிருந்த சிலருக்கு இது எரிச்சலையூட்ட மன்னனிடம் கிறிஸ்தவர்களுக்கு எதிராக கோள் மூட்டி மன்னனை தேவசகாயம் பிள்ளைக்கு எதிராக திருப்பினர். இதன் விளைவாக 1749 பிப்ரவரி 23ல் தேவசகாயம் பிள்ளை கைது செய்யப்பட்டு பல்வேறு இன்னல்களுக்கு இரையானார். கழுதையின் மீது ஏற்றி எருக்கமாலை அணிவித்து ஊர்கள் தோறும் கொண்டு செல்லப்பட்டார். பசியோடும் தாகத்தோடும் போராட இயேசுவை வேண்டிக் கொண்டே வழியில் புலியூர்குறிச்சியில் பாறையில் தன் கை முட்டால் இடிக்க தண்ணீர் ஊற்றெடுத்து அவர் தாகம் தீர்த்தது. அது இன்றும் வற்றாமல் ஊற்றெடுத்து வரலாறாக திகழ்கின்றது. துன்ப பயணத்தின் இறுதியில் 1752 ஜனவரி 14 -ல் ஆரல்வாய்மொழி மலையில் சுட்டு கொலைச் செய்யப்பட்டார். காட்டு விலங்குகளுக்கு வீசப்பட்ட அவரது உடலின் எஞ்சிய பகுதிகள் கோட்டார் தூய சவேரியார் ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது. கோட்டார் மறைமாவட்டம் அவருக்கு மறைசாட்சிப் பட்டம் வழங்கப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. இதன் பலனாக திருத்தந்தை 16ம் பெனடிக்ட்

அவர்களால் தேவசகாயம்பிள்ளை முக்திபேறுபெற்ற மறைசாட்சி என ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனை அறிக்கையிடவும் இறைவனுக்கு நன்றி செலுத்தவும் இவ்விழாவானது கோட்டார் மறைமாவட்டத்தால் மேற்குறிப்பிட்ட இடத்தில் வைத்து நடத்தப்பட உள்ளது. இப்புனிதமான நிகழ்வில் இறைமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு இறையாசீரைப் பெற உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மக்களின் ஆன்மீக வாழ்வை புதுப்பித்துக் கொள்வதற்காக நமது மறைமாவட்டத்தின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் இறைவார்த்தைக் கொண்டாட்டமானது ஏற்கெனவே அறிவித்தபடி 2012 டிசம்பர் 7,8,9 (வெள்ளி, சனி, ஞாயிறு) தேதிகளில் படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலய வளாகத்தில் வைத்து காலை 9.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நடைபெறும். வேளாங்கண்ணி குளோறியா நற்செய்தி அறிவிப்புப்பணி குழுவினரால் நடத்தப்படும் இந்நற்செய்திப் பெருவிழாவில் தமிழ் மற்றும் மலையாளமொழிகளில் செய்திகள் வழங்கப்படும். இந்த ஆண்டு முதல், 13 வயது வரையுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு தியானம் டிசம்பர் 8,9 தேதிகளில் படந்தாலுமூடு ஆலயத்தில் வைத்து தனியே சிறப்புக் குழுவினரால் நடத்தப்படும். அனைத்துக் குழந்தைகளையும் பெற்றோர் அனுப்பி வைக்கும் படி கேட்டுக் கொள்கிறேன். “கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது, இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது, ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்கு குத்தி ஊடுருவுகிறது.” (எபி 4:12). உயிருள்ள, ஆற்றல் மிக்க இறைவார்த்தைகள் பகிரப்படுகின்ற இந்த 14 -வது இறைவார்த்தைக் கொண்டாட்டத்தின் வாய்ப்பை அனைவரும் பயன்படுத்தி இறைவனின் அருளையும் ஆசீரையும் நிறைவாக பெற்று விசுவாசத்தைப் பகிர்ந்து நிறைவாழ்வை நோக்கி பயணம் செய்ய உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன். வார்த்தையாம் இறைவன் நம்முள் வாழ்வாய் குடிகொள்ள இறைவனை வேண்டுகிறேன். வாழ்வளிக்கும் இறைவார்த்தைகள் நம்மை வாழ வைப்பதாக. இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

தக்கலை **மார். ஜார்ஜ் இராஜேந்திரன்**

20.11.2012 தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

குறிப்பு: இச்சுற்றுமடலை நவம்பர் 25 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை வாசிக்கவும்.